DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்று கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Joy H. Selvanayagam

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Kailain Thillainathan Sales Representative
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tel : 647-344-6600

Ontario approved Pawn Brokers Pioneers and established leaders in the community
KANAGAAMBIKAI PAWN BROKERS
கனகாம்பிகை தங்கநகை அடகுமையம்
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1262 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 12, 2020

- **உலக நாடுகளில் கொரோனா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை நேற்று 7,601,170 ஆக உயர்ந்தது..**
- **உலகெங்கும் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 424,121 ஆக அதிகரித்துள்ளது..**
- **இலங்கையில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இல்லை**
- **அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு. மொத்த இறப்பு 116,120 ஆக உயர்ந்துள்ளது**



கடந்த பல வாரங்களாக, உலக மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்யும் கொரோனா வைரஸ் நேற்று வியாழக்கிழமை 11ம் திகதி மாலை வரை பலிகொண்ட மக்களின் எண்ணிக்கை நாடுகள் வாரியாக தரப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| அமெரிக்கா: 116,120 | இத்தாலி: 34202 | கனடா: 8001 | இங்கிலாந்து: 41,279 | ஸ்பெயின்: 27,301 |
| ஜேர்மனி: 8870 | சீனா: 4659 | பிரான்ஸ்: 29,352 | ஈரான்: 8607 | இந்தியா: 8531 |
| இலங்கை: 11 | பெல்ஜியம்: 9579 | பிரேசில்: 41065 | ரஸ்யா:- 6521 | |

# கொவிட்–19 தொடர்பான பிரச்சனைகளைச் சமாளிக்க அமெரிக்காவும் கனடாவும் இலங்கைக்கு நிதியுதவி



கொவிட்-19 தொற்றுநோய் நெருக்கடியை சமாளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்காக அமெரிக்காவும் கனடாவும் நிதியுதவி வழங்கியுள்ளன.

அமெரிக்க அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் யுனிசெப் நிறுவனம் ஊடாக ஆறு இலட்சம் டொலர்களை வழங்கியிருக்கிறது.

ஆபத்து அதிகமாகவுள்ள சுகாதார நிலையங்களில் இடர்த் தொடர்பாடல் சமூக ஈடுபாடு கை கழுவுதல் தொற்றைக் கட்டுப்படுத்தல் நீர்-மலசலகூட வசதிகளை விருத்தி செய்தல் போன்ற பணிகளுக்காக நிதியுதவி பயன்படுத்தப்படும். இதற்காக அரசின் துணையுடன் யுனி-செப் நிறுவனம் திட்டமொன்றை அமுலாக்குகிறது.

கனேடிய அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஊடாக நான்கு இலட்சம் கனேடிய டொலர்களை வழங்கியிருக்கிறது. இதற்குரிய உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது. பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள பெண்களும் சிறுமிகளும் கொவிட்-19 நெருக்கடி காலத்தில் குடும்ப வன்முறைகள் மற்றும் இனவிருத்தி சுகாதாரம் தொடர்பான முக்கியமான சேவைகளை பெற வழிவகுப்பது இந்த உதவித் தொகையின் நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX

peel District School Board

# Start with a smile

## Play, wonder and learn in Kindergarten

Peel District School Board elementary schools are now accepting online kindergarten registrations.




**Register online for Kindergarten**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah.
4062 Ellesmere Rd, Scarborough, ON, M1C 1J2,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.uthayannews.ca

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

உதயனில் விளம்பரங்கள் இதயத்தில் பதிந்த ஓவியங்கள் அனேக வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற பத்திரிகை உதயன்

**GHURUS TOWING**

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire
We pay scrap up to $1000



NIRMALAN (ROGER): (416) 990-7777 (416) 984-7777

**COMPUTER REPAIR**

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN: (416) 894-6244

**BASEMENT FOR RENT**

Scarborough நகரில் Markham / Ellesmere சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில் இரண்டு அறைகள் கொண்ட basement எதிர்வரும் July 1st தொடக்கம் வாடகைக்கு உண்டு. Separate entrance உள்ளது. சிறிய ஒரு குடும்பம் அல்லது பெண்கள் விரும்பத்தக்கது.

Call: (647) 675-4799

**BASEMENT FOR RENT**

Markham நகரில் McCowan / 14th Ave. சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில் இரண்டு அறைகள் கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு. Separate entrance உள்ளது. முழுமையான சமையல் பகுதி, மற்றும் washer, dryer அனைத்தும் உண்டு. சிறிய ஒரு குடும்பம் விரும்பத்தக்கது. வாடகை: $1,350 மட்டுமே.

Call: (647) 675-4799

**இலங்கையிலுள்ள**
உங்கள் உறவினர்களுக்கு சென்றடைய
நினைவஞ்சலி மற்றும் அந்தியேட்டி அழைப்பு விளம்பரங்கள் இலங்கையில் உள்ள பத்திரிகையில் பிரசுரிக்க எம்மை நாடுங்கள்...
நினைவஞ்சலி Posters மற்றும் அந்தியேட்டி அழைப்பு நூல் வடிவமைத்து அச்சிட்டு செய்துதரப்படும்...
+94 777-555026
6A, Perakumba Place, Wellawatte.

**Special Promotion**
**Camsonics Door Bell**




$275 NOW $200 LIMITED TIME OFFER

Monitor your front door from anywhere using your mobile device with the 1080p Video Doorbell with Night Vision from Ring. This video doorbell features 1920 x 1080 video, night vision functionality for visibility at night and in low-light conditions, and a 160° field of view. Adjustable motion sensors allow you to select the setting you desire for your home from the comfort of your mobile device via the free Ring app. A built-in microphone and speakers with noise cancellation allow you to listen and respond to those at your front door.

Rajeev : 647 302 5748

TEL: (416) 752-1524 --- FAX: (416) 752-6703 -- uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இனம் மற்றும் மதம் சார்ந்த அடக்குமுறைகளுக்கு பின்னால் எப்போதும் ஆளும் வர்க்கம் மூர்க்கத்துடன் செயற்படுகின்றது

கொரோனா என்னும் கொடிய நோய்க்கிருமியின் தாக்கம் இரண்டு இலட்சக்கணக்கான உயிர்களை இது வரை பலிகொண்டுள்ளது.

தொற்று நோய்களின் தாக்கம் மனித இனம் தோன்றிய காலந்தொட்டு ஒரு அச்சுறுத்தலாக இருந்தாலும், அவற்றை மனிதர்கள் ஒரு ஆபத்தான விடயமாகக் கருதவில்லை.. காலத்திற்கு காலம் மக்களை துன்புறுத்துகின்ற ஒரு விடயமாக இதைக் கருதி, சம்பவிக்கின்ற மரணங்களைக் கூட உயிர்களின் இழப்புக்கள் என்று கருதாமல், எண்ணிக்கையை மாத்திரம் கணக்கிட்டு தங்கள் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கும் செயற்பாடுதான் எப்போதும் தொடர்ந்தது.

ஆனால் இந்தக் கொரோனா எமக்குக் கற்றுத் தந்தவை பல.

இவ்வாறு தங்களைத் தாக்கும் தொற்று நோய்கள் தொடர்பாகக் கூட, தகுந்த பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்காமல் இருப்பது போன்றே உலக மக்கள் வேறு பல விடயங்களிலும் தாங்கள் பாதிக்கப்படுவதை நன்கு உணராமலும் அதற்கு எதிராக போராடமலும் இருந்துவந்துள்ளார்கள்.

இவ்வாறு உலக மக்கள் அதிக கவனஞ்செலுத்தி தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தவறிய விடயங்களில் தற்போது உலகெங்கும் மிகவும் ஒரு விசம் போன்று பரவியுள்ள இனம் மற்றும் மதம் சார்ந்த அடக்கு முறைகளும் படுகொலைகளும் இன அழிப்புகளும் அடங்கும்.

இதனால். தொடர்ந்து முதலாளித்துவமும் ஆட்சியாளர்களும் சகபாடிகளாக இணைந்து, அடக்கப்படுகின்ற மக்களின் வாழ்க்கையை இல்லாமற்செய்வதோ அன்றி அவர்களை அவலங்களும் இழப்புக்களுக்கும் மத்தியில் வாழ நிர்ப்பந்திக்கும் கொடுமை தொடருவதற்கு உதவின.

உலக மக்கள் தங்களை மனித குலத்தின் பிரதிநிதிகள் என்று கருதாமல் கூறுகளாக பிரிக்கப்பட்டு இருந்ததை தகுந்த நேரத்தில் கவனிக்கமால் இருந்தபடியால் தான் பிரிவினையை விரும்பியிருந்த முதலாளித்துவமும் ஆட்சி அதிகாரத்தை எப்போது தங்கள் கைகளில் வைத்திருக்க விரும்பும் குறிப்பிட்ட பிரிவினரும் தங்கள் விருப்பம் போல ஆண்டாண்டு காலமாக மிகவும் தந்திரமான முறைகளை பிரயோகித்து ஆட்சி அதிகாரத்தை தங்கள் கைகளில் தக்கவைத்துக் கொள்வதும், எப்போதும் தங்களுக்கு அடுத்த நிலையிலேயே மக்களும் உழைக்கின்ற தொழிலாளர்களும் இருக்க வேண்டும் என்று விரும்புவதும் உலகில் எந்த நாட்டிலும் இடம்பெ'றுகின்ற சம்பிரதாயமாக நிலைபெற்றுவிட்டது மிகுந்த கவலைக்குரியது.

மனிதர்கள் ஆதிகாலத்தில் தங்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அவர்கள் கூட்டாக உழைத்தார்கள். மனித குலத்தின் இந்த உற்பத்தியானது அவர்களின் தேவைக்கும் அதிகமாக எஞ்சிய போது இந்த எஞ்சிய பகுதி யாருக்கு உரிமையானது என்ற போட்டி உருவாகிறது. இந்தப் போட்டியின் விளைவாக மனித குலம் வர்க்கங்களாகப் பிளவுபட்டது. அதனால் அதிகாரம் என்று தொடங்கி பின்னர் அது ஆட்சி அதிகாரம் என்ற நிலைக்கு மா-றியது. ஆட்சியில் அமர்ந்தால் தான் அதிகாரங்களை தங்கள் வைத்துக்கொள்ளலாம் என்ற அவசியம் முதலாளித்துவத்திற்கு உண்டானது.

தொடர்ச்சியாகச் சுரண்டுவதற்காகவும் அதிகாரங்களை தங்கள் வசம் வைத்திருப்பதற்காகவும் அவற்றைத் தமது தேவைக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்வதற்காகவும் மக்கள் மத்தியில் திட்டமிட்டுப் பிளவுகளை உருவக்கியது முதலாளித்துவம்.

மக்கள் என்று நிலையிருந்தவர்கள் தம்மிடையே மோதிக்கொள்ளும் வகையில் மதம் இனம் போன்ற பிரிவுகளைக் கவனிக்கும் வகையில் திட்டமிட்ட ஆட்சியாளர்கள் அதில் வெற்றியும் ஈட்டினார்கள்.

ஆனால் சுரண்டப்பட்ட மக்களோ, தமது முதன்மையான எதிரியான ஏகாதிபத்தியங்கள்ளை மறந்து விட்டு தம்மைத் தாமே அழித்துக் கொள்வதை நிறைவேற்றினார்கள்.

இவ்வாறாக தற்போது உலகெங்கும் பல நாடுகளில் மக்கள் தங்களுக்குள் மோதிக் கொள்ளும் வகையில் இன ரீதியான மத ரீதியான அடக்குமுறைகள் இடம்பறுவதும், அவை அந்தந்த நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சனைகள் என்று மற்றவர்கள் அக்கறை கொள்ளாமல் இருப்பதும் பழகிப் போய்விட்டது.

இலங்கையிலும் இந்தியாவிலும் மதம் சார்ந்த இனம் சார்ந்த பிளவுகளை ஆட்சியாளர்களே ஏற்படுத்துவதையும் அதற்காக ஆட்சி அதிகாரம் பயன்படுததப்ப'டுவதையும் நாம் 'நேரடியாகவே காண்கின்றோம்.

இந்தியாவில் மோடியின் அரசும் இலங்கையின் இராஜபக்சவின் அரசும் எந்தெந்த மதப்பிரிவினருக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றன என்பதும் அதனால் பாதிக்கப்படுகின்ற எந்த இனம் அல்லது மதம் சார்ந்த பிரிவினர் தொடர்ச்சியாக அடக்குமுறைகளுக்கு உள்ளாகின்றனர் என்பதை நாம் இங்கு விளக்கமாகக் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை.

இவ்வாறான பல துன்பங்களை அனுபவித்தவர்களே நாங்கள்.

ஒரு இனத்தைச் சேர்ந்த குழந்தைகளைக் கூட கொதிக்கின்ற திரவங்கள் நிறைந்த தகரக் பீப்பாக்களுக்குள் மற்றைய இனத்தவர்கள் வீசி எறிந்த கொரூரம் இன்னும் தொடர்வதையே அங்கு காண்கின்றோம்.

உலகெங்கும் நாம் அறிந்தவகையில் பல நாடுகளில் எந்தெந்த மதப்பிரிவினர் சிறுபான்மையினராக உள்ளார்களோ, அவர்களை அழித்தொழிப்பதில் ஆட்சியாளர்களுக்கு முக்கிய பங்கு இருந்து வந்திருக்கின்றது.

பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சியாளர்களால் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் படுகொலை செய்யப்படுவதையும் மியன்மாரின் சிறுபான்மை இஸ்லாமியர்கள் அழிக்கப்படுவதையும் கண்ட நாம் தற்போது சீனாவிலும் இஸ்லாமியர்கள் அடக்குமுறைக்கு உள்ளாகி சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதை செய்திகள் வாயிலாக அறிகின்றோம்

சீனாவில் சின்ஜியாங் மாகாணத்தில் உய்குர் முஸ்லிம்கள் மற்றும் பிற முஸ்லிம் குழுக்கள் மீதான ஒடுக்குமுறைக்குக் காரணமானவர்கள், ஆட்சியில் உள்ளவர்களால் அடக்கு முறைக்கு உள்ளாகின்றார்கள் என்பதற்கு போதிய ஆதாரம் அங்கு கிடைத்துள்ளது

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் சென் குவாங்குவோ உய்குர் முஸ்லிம்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்கு முக்கிய காரணமானவர் என்றும் 10 லட்சம் உய்குர் முஸ்லிம்கள் மற்றும் பிற சிறுபான்மை முஸ்லிம் பிரிவினர் முகாம்களில் அடைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருவதாக கசிந்த சீன அரசின் ஆவணங்களை வைத்து த நியூயார்க் டைம்ஸ் நாளிதழ் எழுதிய கட்டுரைகள் இப்போது சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன

இதே போன்று இலங்கையில் கோத்தாபயவின் ஜனாதிபதி செயலணி என்னும் பெயரில், ஆட்சி அதிகாரமும் இராணுவத்தின் மூர்க்கத்தனமான செயற்பாடுகளும் தயாராக உள்ளதாக அறிகின்றோம்.

அங்கு தமிழ் மற்றும் இஸ்லாமியர்களை மதம் மற்றும் இனம் சார்ந்து அடையாளங்களை அழிக்கும் 'முயற்சிகள் இடம்பெறுவதை எவ்வாறு சிறுபான்மை மக்கள் எதிர்கொள்ளப்போகின்றார்கள் என்பதையும் நடைபெறப்போகின்ற பொதுத் தேரதலில் பாராளுமன்றம் செல்லப்போகின்ற தமிழ் முஸ்லிம் அரசியல் வாதிகள் என்ன செய்யப்போகின்றார்கள் என்பதையும் பொறுத்திருந்துதான் நாம் பார்க்க வேண்டும்.

# கொரோனா மரணங்கள் பற்றி மனந்திறந்து பேசுகின்றார் மருத்துவர் பால. கலைக்கோவன்,

**(தமிழ்நாட்டிலிருந்து)**



தமிழ்நாட்டின் சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் மறைவை ஒட்டி, பலரும் என்னிடம் கேட்ட கேள்விகள்:

"அவரை காப்பாற்றி இருக்க ஏதாவது வழி இருந்ததா?" "எவ்வளவு பணம் செலவு செய்தாலும் கொரோனாவ-்டம் இருந்து உயிரை காப்பாற்ற முடியாதா??" "அலே-ாபதி மருத்துவம் (Modern medicine) மீது நம்பிக்கை வைக்கலாமா?" "வென்டிலேட்டரில் போடப்பட்டால் காப்பாற்றவே முடியாதா?"

கீழே உள்ளவைதான் அந்த கேள்விகளுக்கான எனது பதில்:

இங்கே உள்ள படத்தில் நீங்கள் காண்பது கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட 20 வயது பெண்ணின் நுரையீரல்.... பொதுவாக நுரையிரல் பஞ்சு போன்ற மென்மையும் ,ரோஜாப்பூ இதழ் நிறத்திலும் இருக்கும்... ஆனால் இந்த 20 வயது பெண்ணின் நுரையீரல் கல் போன்று இறுகி காணப்படுகிறது... அதனால், வழக்கமாக நுரையீரலுக்கு செல்லும் ஆக்சிஜன் செல்ல வழியில்லாமல் உடல் உறுப்புகள் ஒவ்வொன்றாக செயல் இழந்து விரைவில் இறந்து விடுகிறார்கள்... கொரோனா தொற்று ஏற்பட்ட பின்னர் வென்டிலேட்டர் (செயற்கை சுவாச கருவி) பொருத்தப்பட்டாலும் , நுரையீரலின் தன்மை கல் போன்று இறுகி காணப்படுவதால் பயன்தராது!

அப்படியானால் இந்த நபர்களை காப்பாற்றவே முடியாதா என்கிற உங்களின் கேள்வி நியாயமானது தான்... நிச்சயம் காப்பாற்றமுடியும். அதற்கு சில அளவுகோல்கள் உண்டு.

உதாரணமாக பாதிக்கப்பட்ட நபரின் வயது, அவருக்கு உள்ள மற்ற நோயின் தன்மை, கடந்த காலத்தில் செய்துகொண்ட அறுவை சிகிச்சைகள், புகைப்பழக்கம், மது அருந்தும் பழக்கம், சிறுநீரக கல்லீரல் செயல்பாடுகள், எலும்பு தேய்மானம் போன்றவற்றைப் பொறுத்து அவரை காப்பாற்றும் வாய்ப்புகள் அதிகமாகும்.

இவை அனைத்தும் ஒத்து வந்தாலும் கூட,செயற்கை சுவாசம் (VENTILATOR) மட்டுமே போதாது.

ECMO (எக்மோ) என்று சொல்லப்படுகின்ற, EXTRA CORPOREAL MEMBRANE OXYGENATOR என்ற கருவி மிக மிக அவசியம். இந்தக் கருவி தான் நுரையீரல் செய்கின்ற அதிக தொழில்நுட்ப வேலையை செம்மையாக செய்யும். மறைந்த முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு இறுதியாக பொருத்தப்பட்டதும் இதே கருவிதான். இந்தக் கருவியின் ஒருநாள் உபயோக கட்டணம் மட்டுமே ஒரு லட்சத்திற்கும் மேல்... (தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் மூன்று ECMO கருவிகள் உள்ளன)

ECMO கருவியும் ஒரு தற்காலிக ஏற்பாடு மட்டும்தான். EiuaPuiy சரி செய்வதற்கான வாய்ப்பை.'. நேர அவகாசத்தை அது வழங்கும். பத்து நாள் முதல் 40 நாளைக்குள் நுரையீரலில் ஏற்பட்ட பிரச்சினைகளை முழுமையாக சரி செய்துவிட்டால், ECMO மூலம் ஒருவரை காப்பாற்ற அதிக வாய்ப்புகள் உண்டு... அதற்குமேல் வாய்ப்புகள் மிக மிக குறைவு (எனது அனுபவத்தில்).



மூன்று நாட்களுக்கு முன்பு, இந்தியாவின் தலைசிறந்த கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் சுநடய அவர்களை தொடர்புகொண்டு இதைப்பற்றி கூறினேன் (திரு அன்பழகன் அனுமதிக்கப்பட்ட ரெலா மருத்துவமனையின் இயக்குனர்) அவரும் இந்தக் கருத்தை ஆமோதித்தார்.. திரு அன்பழகன் அவர்களுக்கு ECMO கருவி பொருத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும், பல்துறை மருத்துவ நிபுணர்களின் ஆலோசனை பெற்றிருப்பதாகவும் கூறினார். நான் மேலே குறிப்பிட்ட அளவு கோல்களின் படி, திரு அன்பழகன் அவர்களின் வயது, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்டது, நாள்பட்ட பிற மருத்துவ நோய்கள், சில பழக்கவழக்கங்கள் போன்றவை அவருக்கு ஏதுவாக இல்லை. அதனால் அவர் மருத்துவ சிகிச்சை பலனின்றி உயிரிழக்க நேரிட்டது.



கீழே நீங்கள் காணும் நுரையீரலுக்கு சொந்தமான அந்த 20 வயது பெண்ணிற்கு, இன்றுதான் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை நடைபெற்றது (Double #LungTransplant -June 11,2020).

அமெரிக்காவை சேர்ந்த அந்த நபருக்கு நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்தது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நுரையீரல் நிபுணர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது அந்தப் பெண் நலமுடன் ஐஊரு வில் உள்ளார்.

எனவே நவீன மருத்துவத்தால் ஒரு உயிரை எப்பேற்பட்டாலும் காப்பாற்றி விட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது, ஆனால் அதற்கு சில அளவுகோல்கள் உள்ளன என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

புகைப்பழக்கம், மது அருந்தும் பழக்கம் உள்ளவர்கள் நவீன சிகிச்சை எடுத்துக்கொண்டாலும் அந்த பழக்கவழக்கங்கள் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்.

உடல் பருமன், அதிகமான குறட்டை, சர்க்கரை நோய் போன்றவைகளும் பின்னடைவை ஏற்படுத்தும்.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை எடுத்துக் கொண்டவர்கள் மிக மிக கவனமாக இருக்க வேண்டும். இதுபோன்ற காலங்களில், வெளியே வருவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். வழக்கமாக எடுத்துக் கொள்ளும் மருந்துகளை தவறாமல் சாப்பிட வேண்டும். மருத்துவர்களின் ஆலோசனைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

***மருத்துவர் பால. சூகலைக்கோவன்,***
***நுரையீரல் சிறப்பு மருத்துவர், கடலூர். தமிழ்நாடு***

# புத்தபிரானின் போதனைகளை பின்பற்றுகிறார்களா இலங்கை ஆட்சியாளர்கள்?

**- சிவா பரமேஸ்வரன் --- முன்னள் மூத்த செய்தியாளர் பிபிசி -**



மிகுந்த பக்தியுடன் புத்தபிரானின் போதனைகளைச் சுமந்து, அரஹத் மஹிந்த தேரர் இலங்கைக்கு வந்த நாள் முதல் இலங்கையில் சமூக விழுமியங்கள், பொருளாதாரம், இலக்கிய, கலை மற்றும் கைவினைகள் ஆகியவை புதிய திருப்பம் கண்டன என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தனது பூரணைச் செய்தியில் கூறியுள்ளார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவரது வருகை இலங்கையின் மத, கலாச்சார, சமூக மற்றும் அரசியல் நாகரீகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது என்றும் கோத்தாபய ராஜபக்ஷவின் செய்தி கூறுகிறது.

அகிம்சை, சகவாழ்வு, வெறுப்புணர்வு இல்லாமை, சத்தியத்தின் அடிப்படையில் நீதி பரிபாலனம் போன்ற பல அம்சங்களை அரஹத் மஹிந்த தேரர் என்று அறியப்படும் பேரரசர் அசோகரின் மகன் அச்சமயத்தில் இலங்கையை ஆண்ட மன்னன் தேவனாம்பியதிஸ்ஸவுக்கு போதித்தார் என்று வரலாற்று ஆய்வாளர்களும் பௌத்தமத வல்லுநர்களும் நீண்டகாலமாகக் கூறியுள்ளனர்.

ஆனால், ஆட்சிகளும் காட்சிகளும் மாறிய நிலையில், நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் ஆட்சி பீடத்துக்கு வந்தவர்கள், பௌத்தமே தங்கள் உயிர் மூச்சு என்று கூறிக் கொண்டே புத்தபிரான் கூறிய உபதேசங்களை காற்றில் பறக்கவிட்டனர் எனும் விமர்சனத்துக்கு ஆளாயினர்.

அனைத்தையும்விட மிக முக்கியமாக, அரஹத் மஹிந்த தேரர் இலங்கைக்கு வந்த பிறகு நடைபெற்றுள்ள சமூக-மதப் புரட்சியின் மூலம் புதியதோர் சமுதாயம் உருவானது என்கிறது ஜனாதிபதியின் பூரண தினச் செய்தி.

அந்தப் புதியதோர் சமுதாயமானது வெற்றி மற்றும் தோல்விகள், புகழ் மற்றும் அபகீர்த்தி, வாழ்த்து மற்றும் குற்றச்சாட்டுக்கள், மகிழ்ச்சி மற்றும் சோகம் என அனைத்தையும் சமமாக ஏற்றுக் கொண்டு அனைத்து உயிரினங்களையும்-பெரியதோ சிறியதோ-அதீத நேர்மையுடன் நடத்தி, காமம் அல்லது தேவையில்லாத பற்றுகளற்ற ஒரு வாழ்க்கையை எண்வகை மார்க்கங்களின் அடிப்படையில் கடைப்பிடித்து வாழும் சமுதாயமே என்று தனது செய்தியில் அவர் கூறியுள்ளார்.

எனினும் பகுதியளவேனும் செய்தியை விடுத்திருப்பவர் பின்பற்றியிருந்தால் அது மிகவும் பாராட்டத்தக்கதாகும். போரின் போது ஹசரணடைந்த அல்லது கையளிக்கப்பட்டஹ உறவுகள் குறித்து 1200 நாட்களுக்கும் மேலாகப் போராடும் உறவுகளுக்கு புத்தபிரானின் போதனைகள் மற்றும் அர்ஹத் மஹிந்த் தேரரின் அறிவுரைப்படி அளிக்கும் பதில் என்ன?



இலங்கை பெற்றுள்ள மிகப் பெரிய கொடை பௌத்த தர்மம் என்று மிக்க பணிவோடு கூறியுள்ள ஜனாதிபதியும், அவருக்கு முன்னர் ஆண்டவர்களும் எந்த அளவுக்கு அந்த தர்மத்தைக் கடைபிடித்தனர் எனும் கேள்விக்கு பதில் இல்லை.

புத்தபிரான் அனைத்து உயிர்களும் இணைந்து வாழவேண்டும் என்பதை வலியுறுத்தியவர். அவ்வகையில் அவர் இனவாதத்துக்கு எதிரானவர் என்பதை அறிய முடிகிறது.

அவர் போதித்த ஐம்பெரும் கோட்பாடுகளை ஆராய்ந்தால் அவர் எவ்வளவு யதார்த்தமாக வாழ்வியல் வழிமுறைகளை உணர்த்தினார் என்பது புரியும்.

அதில் முதலாவது கொல்லாமை. இலங்கையைத் தொடர்ச்சியாக ஆண்டவர்கள் தாங்கள் கொல்லாமையை கடைப்பிடித்தோம் என்று சொல்ல முடியுமா? மக்கள் விடுதலை முன்னணியின் எழுச்சியை அடக்கியபோதும், உள்நாட்டுப் போரின் போதும் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்காது. 1983 ஆண்டு கறுப்பு ஜூலை நிகழ்வுகளில் யாரும் கொல்லப்படவில்லை என்று அப்போது ஆட்சியில் இருந்தவர்களால் கூற முடியுமா?

அடுத்து களவில் ஈடுபடக் கூடாது என்பது. இலங்கையில் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஆட்சியில் இருந்தவர்கள் புத்தபிரான் கூறியபடி களவெடுக்காமல் ஆண்டுள்ளனரா?

மூன்றாவது பொய்யுரையாமை. இதன் பொருள் உண்மை பேசுவது. என்றாவது ஆட்சியில் இருந்தவர்கள் இதை கடைபிடித்துள்ளனரா? போர்க் காலத்தில் அரசு என்ன கூறியது என்பதை உலகமே அறியும்.

நன்காவது, பாலியல் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என்பதாகும். போர்க் காலத்தில் இராணுவத்தினர் கையாண்ட பல உபாயங்களில் இதுவும் ஒன்று எனும் குற்றச்சாட்டுக்கு பதிலுள்ளதா ஆட்சியாளர்களிடம்?

நிறைவாக மது மற்றும் போதைப் பொருட்களை உட்கொள்ளாமல் இருப்பது. இவை குறித்த செய்திகள் இல்லாத நாளுள்ளதா இலங்கையில்? தொடர்ந்து ஆட்சியாளர்கள் இந்த இரண்டு வி'யங்களையும் ஆதரிக்கவில்லை என்று கூற முடியுமா?

ஜனநாயக ஆட்சியில் குறைபாடுகள் இருக்கும், அது தவிர்க்க இயலாது. ஆனால் பௌத்தத்துக்கு முன்னுரிமை என்று கூறிக் கொண்டு, அந்த மதத்தை தோற்றுவித்த மகானின் அறிவுரைகளையும், வழிகாட்டுதல்களையும் கடைப்பிடிக்காமல் இருப்பது முரண்நகையல்லவா?

இனியாவது புத்தபிரானின் அறிவுரைகளை ஆட்சியாளர் பின்பற்றுவார்கள் என்று நம்புவோம்.

# கனடாவில் தமிழர்களால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் சார்பாக ஸ்காபுறோ வைத்தியசாலைக்கு நிதி அன்பளிப்பும் உணவுப் பொதிகளும் வழங்கப்பெற்றன











ரொரன்ரோ பெரும்பாகத்திலும் சற்று வெளியிடங்களிலும் மூன்று தமிழ் பேசும் அன்பர்களால் நிர்வகிக்கப்படும் Domino's Franchises in GTA. Pelican "Events and Catering Durham Oshawa, மற்றும் CLeo's Dry Cleaners ஆகிய நிறுவனங்கள் சார்பாக ஸ்காபுறோ பொது வைத்தியசாலையின் சேவைகளுக்கு மதிப்பளித்து அண்மையில் நிதி அன்பளிப்பும் உணவுப் பொதிகள் வழங்கிய நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

அன்றைய தினம் Domino's Franchises in GTA நிறுவனத்தின் சார்பில் வைத்தியசாலையில் தற்போது மக்கள் உயிர்களைக் காப்பாற்றும் வகையில் முன்வரிசைப் பணியாளர்களாக பணியாற்றும் வைத்தியர்கள். தாதிகள் மற்றும் சேவையாளர்களின் நலன் கருதி 15000 (பதினைந்தாயிரம் டாலர்கள்) காசோலை வழங்கப்பெற்றது.

குமார் முரளிதரன் அவர்களின் Pelican Catering நிறுவனத்தினர் வைத்தியசாலைகள் மற்றும் முதியோர் வதிவிடங்கள் தற்போது மருத்துவ சேவையில் ஈடுபட்டுள்ள கனடிய இராணுவம் ஆகியவற்றுக்கு சுத்தமானதும் சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டதும் சத்தானதுமான உணவு வகைகளை வழங்கிவருகின்றனர். அவர்கள் அன்றைய தினம் வைத்தியசாலையின் முன்வரிசைப் பணியாளர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கினார்கள்.

குமார் காராளசிங்கம் அவர்களின் CLeo's Dry Cleaners நிறுவனத்தினர் தற்போது 50 வீதக் கழிவில் அவசர காலப் பணியாளர்களின் பணி உடைகளை வழங்கிவருகின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கு காணப்படும் படங்களில் மேற்படி மூன்று நிறுவனங்களின் உரிமையாளர்களோடு "கலாபம்" ஸ்ரீநிவாசன் மற்றும் வர்த்தகப் பிரமுகரும் வைத்தியசாலை ஆலோசனைக் குழு உறுப்பினருமான திரு சுகு முத்துலிங்கம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# உரும்பிராயில் சிவகுமாரனின் நினைவு நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பெற்றது













விடுதலைப் போராட்டத்தின் முதல் வித்து தியாகி பொன் சிவகுமாரனின் 46 ஆவது நினைவேந்தல் நிகழ்வு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள திருவுருவச்சிலை வளாகத்தில் இடம்பெற்றது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வு அகவணக்கத்துடன் ஆரம்பமானது.

தவிசாளரின் அஞ்சலிக்குறிப்பினைத் தொடர்ந்து தியாகி பொன் சிவகுமாரனின் சகோதரி சிவகுமாரி ஈகைச்சுடரினை ஏற்றிவைத்தார். தொடர்ந்து முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈஸ்வரபாதம் சரவணபவன் ஆகியோர் மலர்மாலைகளை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன், சுன்னாகம் பிரதேச சபை தவிசாளர் தர்ஷன், யாழ். பிரதி முதல்வர் து.ஈசன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான பாலசுப்பிரமணியம் கஜதீபன், விந்தன் கனகரத்தினம், நல்லூர் உப தவிசாளர் ஜெயகரன், வலிகாமம் கிழக்கு பிரதேச மன்ற உறுப்பினர்கள், கல்வியாளர்கள், பிரமுகர்கள், சனசமூக நிலையங்களின் தலைவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் மலர் அஞ்சலி செலுத்தினர். சுகாதார சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு உரைகள் இடம்பெறாது தவிர்க்கப்பட்டு சமூக இடைவெளி பேணப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட்டன.

அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பிப்பதற்கு முன்னிருந்து புலனாய்வாளர்களால் கடுமையாக குறித்த பிரதேசம் கண்காணிக்கப்பட்டுக்கொண்டிருந்தமையும பின்னர் சம்பவ இடத்தில் விசேட அதிரடிப்படையினர் பீல்பைக்களில் வருகை தந்ததுடன் பிரதேசத்தில் தரித்து நின்ற தவிசாளரின் வாகனத்தினை சுற்றி பர்த்து யார் பயன்படுத்தும் வாகனம் என விசாரித்துச் சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம்
உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |



Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மையப்புள்ளி மலேசியத் தமிழிலக்கியக் கழகத்தின் ஆணிவேர்- உலகம் சுற்றியத் தமிழர் இர. ந. வீரப்பனார்

**- நக்கீரன் - மலேசியா**



ஈழ தேசத்தில் தோன்றி தமிழகத்தில் வாழ்வைத் தொடர்ந்து மலேசியத் திருநாட்டில் மையம் கொண்டு உலகத் தமிழர்களை இணைத்ததுடன் தாய்மொழி உணர்வை உயிரணையக் கருதும் பிரெஞ்சு மொழி மக்களின் தாக்கம் நிலவும் புதுவை மண்ணில் தன் வாழ்வை நிறைவு செய்த தமிழ்த் திருமகன் இர. ந. வீரப்பனார்.


இலங்கையின் மலையக மண்டலத்தில் 1930-ஆம் ஆண்டில் இரத்தினம் - நடேசன் இணையரின் புதல்வராகத் தோன்றிய இர.ந. வீரப்பனார், தமிழர்கள் தங்களின் பெயரில் தலையெழுத்தாக தந்தையின் பெயருடன் தாயின் பெயலையும் இணைத்துக் கொள்வது குறித்த விழிப்புணர்வை உலகத் தமிழர் மத்தியில் ஏற்படுத்திய நற்றமிழர் இவர்.

உலகம் சுற்றும் வாலிபன் என்னும் திரைப்படத்தில் நான்கைந்து நாடுகளில் சுற்றியிருப்பார் அந்தப் படத்தின் நாயகன் எம்.ஜி.ஆர். உண்மையில் 40-க்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அந்தந்த நிலத்தில் வாழும் தமிழர்களிடம் உறவு பாராட்டியதுடன் இன-மொழி ஆய்வுப்பணியை பேரளவில் மேற்கொண்டு ஆவணப்படுத்தியவர் வீரப்பனார்.

உலக அளவில் தமிழர் பரந்து வாழும் எல்லையைக் கண்டறியும் வேட்கையைக் கொண்டிருந்த இவர், உலகத் தமிழரிடையை ஒருங்கிணைப்பையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தும் நோக்கில் அரசியல் கலப்பற்று உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தைத் தோற்றுவித்ததுடன் அதன் நிறுவனத் தலைவராகவும் மலேசியத் தலைவராகவும் பாரிய பாங்கில் செயல்பட்டவர்.

அதனிலும் குறிப்பாக, மலேசியத் தமிழ் இலக்கியக் கழகத்தின் இன்றைய செம்மாந்த நிலைக்கு அடியும் ஆதாரமுமாக இருந்த தமிழாராய்ச்சியாளர் இவர்.

பயண நூல், சிறுகதை, ஆராய்ச்சிக் கட்டுரை, தமிழாய்வுப் பணி, இலக்கிய நாடகம், தமிழர்தம் மொழிப் போராட்டம், உலகத் தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்பு என்றெல்லாம் 40-க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றிய வீரப்பனார், ஒரு தலைசிறந்த இலக்கியப் படைப்பாளர்.




கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகத் தமிழர் குரல் என்னும் பருவ இதழை நடத்திய இவர், பத்திரிகை ஆசிரியராக உருவாகுமுன் பள்ளி ஆசிரியராக விளங்கியவர். உண்மையில், இர.ந. வீரப்பன் ஒரு நல்லாசிரியத் திருமகன். மலேயாவின் ஈச்ச மரத் தோட்டத் தமிழ்ப்பள்ளி, தென்னை மரத் தோட்டத் தமிழ்ப்பள்ளி, இரசாக் தோட்டத் தமிழ்ப்பள்ளி, கிள்ளான் மிட்லேண்ட்ஸ் தோட்டத் தமிழ்ப்பள்ளி, பந்திங் சுங்கை சோ தமிழ்ப்பள்ளி, காப்பார் நகரத் தமிழ்ப்பள்ளி உள்ளிட்ட தமிழ்ப் பள்ளிகளில் எல்லாம் பணியாற்றி ஓய்வுபெற்ற பின்னரும் தமிழ்ப் பற்றாலும் சமூகக் கடப்பாட்டாலும் இடைநிலைப் பள்ளியில் தமிழ் பயிற்றுவிக்கும் தொண்டை சேவை அடிப்படையில் தொடர்ந்தவர் இவர்.

இவரின் தமிழ்த் தொண்டையும் தமிழ்ப் பற்றையும் பறைசாற்றும் வண்ணம்

தமிழகக் கவிஞர் கதிர் முத்தையனார், இலண்டனைச் சேர்ந்த சுரதா முருகையன் ஆகியோர் நூல் சமைத்துள்ளனர். அத்துடன், இவரின் மகள் முல்லை நாகராசுகூட "இர.ந.வீரப்பனார் வாழ்வும் வரலாறும்" எனும் நூலை எழுதியுள்ளார்.

ஆனாலும் வீரப்பனார் இயற்றிய உலகத் தமிழர், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க வரலாறு, மலேசியத் தமிழர்கள், இலக்கிய இதயம் போன்ற நூல்களே அவரின் பெருமையை இன்னும் வலுவாக முழங்க வல்லன. இதனிலும் மேலாக, இன்றைய அளவில் உலகத் தமிழரிடையே பண்பாட்டளவிலும் மொழி அளவிலும் ஒரு பிணைப்பு பாலம் ஏற்பட்டிருக்கிறதென்றால் அதற்கான பண்பாட்டு இயக்கத்தை பன்னாட்டு அளவில் தோற்றுவித்தவர்களில் முதலாமவர் இர.ந.வீரப்பன். அவருக்கு ஜூன் 8, பிறந்த நாள். வாழ்க அவரின் புகழ்.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# SKN FINANCIAL

www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனையை வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# மணி விழாக் காணும் கருணையாளர் கரம்பனூர் கிருஸ்ணகோபால் செல்லத்துரை



காவலூரில் இருந்து கனடாவுக்கு குடி பெயர்ந்து வந்தோருள் ஒருவரான காவலூர் கரம்பன் தெற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஸ்ணகோபால் செல்லத்துரை வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டு இன்று சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றார். அத்துடன் தனது சொந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு அவ்வப்போது தான, தர்மங்களையும் செய்து வருகின்றார். அதுமாத்திரமன்றி இங்கு கனடாவில் நடைபெறும் தமிழ் நிகழ்ச்சிகள், விழாக்களுக்கும் நிதியுதவி வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். 'அம்மா தங்க நகை அடைவு மாடத்தினை' நடாத்தி வரும் அன்புள்ளம் கொண்ட அவர் இம் மாதம் 12ம் திகதி தனது மணி விழாவினை கொண்டாடுகின்றார்.

குறிப்பாக தனது கிராமமான கரம்பனில் மிகவும் கஷ்டான சூழலில் வாழ்ந்து கொண்டிருப்போருக்கு காலத்துக்கு காலம் நிதியுதவி செய்து வருகின்றார். அதுமாத்திரமன்றி இங்கு கனடாவில் வாழ்ந்து வரும் தனது கிராமத்தைச் சேர்ந்த நண்பர் திரு. கந்தையா இராமகிருஷ்ணன் என்பவருடன் இணைந்து இங்குள்ள தமது கிராமத்தவர்களிடம் நிதி திரட்டி ஊரிலுள்ளோருக்கு தற்போது உணவுப் பொருட்களையும் அன்பளிப்பாக வழங்கும் தொண்டினையும் மேற்கொண்டு வருகின்றார். கல்விமான்கள், ஆசிரியர்கள், பண்டிதர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசியல் வாதிகள், வர்த்தகர்கள், விவசாயிகள் போன்ற பல்வேறு அறிவாளிகளையும், திறமை சாலிகளையும் ஈன்றெடுத்த பெருமைக்குரிய ஊர் காவலூர் என அழைக்கப்படும் ஊர்காவற்றுறையாகும்.

காவலூரின் கரம்பொன் தெற்கு கிராமத்தில் கண்ணியமாக வாழ்ந்து வந்தவர்கள் திரு. திருமதி. செல்லத்துரை கனகாம்பிகை தம்பதிகள். சாதாரண தொழிலாளியான




சிறந்த பண்பாளராகவும், கருணை உள்ளம் கொண்ட தொண்டராவும் திகழும் நல்லிதயம் படைத்த திரு. கிருஸ்ணகோபால் நீண்ட காலம் நலமுடன் வாழ ஆண்டவன் நல்லருள் பாலிக்க வேண்டுமென நமது கரம்பொன் கிராமத்தவர்கள், கனடாவில் வாழும் அவரது உற்றார், நண்பர்கள் அனைவரும் மணி விழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றனர்.







பொன் நகைகளை அடைவு பிடித்து வரும் 'பொன் மனச் செம்மலான' அவர் சீரும் சிறப்பு மாக பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென அவரை நன்கறிந்த ஊரவர்களும், நண்பர்களும் மனமுவந்து வாழ்த்துகின்றார்கள்.

செல்லத்துரை அவர்கள் வருமானத்துக்கேற்ப வாழ்ந்து குடும்பத்தை பேணி வந்தார். பிள்ளைகளும் பாடசாலைகளுக்கு சென்று கல்வி கற்று ஆசார சீலர்களாக வளர்ந்தார்கள். பின்னர் குடும்பத்துடன் கனடாவுக்கு புலம் பெயர்ந்து வந்தனர்.

*அன்புடன் வீரகேசரி மூர்த்தி*

# ஸ்காபுறோ நகரில் கிங்ஸ்டன்–போர்ட்யூனியன் சந்திப்புக்கு அருகில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஒரு பாரிய விபத்து



கட்டடங்கள் நிர்மாணிக்கும் அல்லது வீதிகள் அமைக்கும் இடங்களுக்கு கொன்கிறிட் கலவையை எடுத்துச் செல்லும் ஒரு பார ஊர்தி யொன்று நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஸ்காபுறோவில் விபத்துக்குள்ளாகியது. சம்பவம் நடைபெற்ற இடத்தை நேரடியாகப் பர்வையிட்ட வகையில் வேறு எந்த வாகனமும் இந்த விபத்தினால் பாதிக்கப்படவில்லை என்பது உறுதியாகியது.

இந்த பார ஊர்தியை செலுத்தி வந்த சாரதி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக சம்பவம் நடந்த இடத்தில் விசாரணைகளை நடத்திய பொலிசார் தெரிவித்தனர். இங்கே காணப்படும் படம் எமது படப்பிடிப்பாளரால் எடுக்கப்பெற்றதாகும்.



# தேர்தலில் எந்த ஒரு அரசியல் தரப்பினரையும் ஆதரிக்கப் போவதில்லை என்கிறார் தம்பிராசா செல்வராணி

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எந்த அரசியல் தரப்பினரையும் ஆதரிக்கப் போவதில்லை என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அம்பாறை மாவட்ட தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்துள்ளார்.

அரசியல் சாயங்களை பூசி எமது போராட்டத்தின் குறிக்கோள்களை குழப்ப வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பொரமுன கட்சியினை ஆதரிக்கப் போவதாக அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் சிறு பிரிவுத் தலைவியும் மகளிர் உரிமை செயற்பாட்டாருமான எஸ்.புவனேஸ்வரி கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இக் கருத்தினை மறுத்து அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் செவ்வாய்க்கிழமை(9) தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் எமது சங்கத்தின் பிரிவுத் தலைவியும் மகளிர் உரிமை செயற்பாட்டாருமான எஸ்.புவனேஸ்வரி கட்சி ஒன்றின் வேட்பாளரை ஆதரித்து திருக்கோவில் விநாயகபுரத்தில் அவரது இல்லத்தில் மக்கள் சந்திப்பினை ஏற்பாடு செய்து ஆதரிப்பதாக ஊடகங்களுக்கு கருத்துக்களை கூறி இருந்தார்.


இந்த விடயத்தை நான் மறுக்கின்றேன்.கட்சி ஒன்றினை ஆதரிப்பதாக கருத்துக்களை ஊடகங்களுக்கு தெரிவித்த பெண் எமது சங்கத்தின் சார்பாக உள்ள ஒரு பிரதேச தலைவராவார்.இவரை தற்போது எமது சங்கத்தில் இருந்து நீக்கியுள்ளோம்.

இது தவிர எமது சங்கமானது இதுவரை எந்தவொரு தரப்பினர்களுக்கோ அல்லது வேட்பாளர்களுக்கோ தேர்தலில் ஆதரிப்பதாக எந்தவொரு முடிவினையும் எடுக்கவில்லை.

எனவே தயவு செய்து அரசியல் சாயங்களை பூசி எமது போராட்டத்தின் குறிக்கோள்களை குழப்ப வேண்டாம் என கோருகின்றேன் என்றார்.

# கோவிட்-19 பரவலைத் தடுக்க நாம் ஒன்றாக இணைந்து மாற்றத்தை உருவாக்குகிறோம்

வணிகங்களும் பணியிடங்களும் மீண்டும் திறக்கப்படுகையில், நாம் அனைவரும் தொடர்ந்து அனைவரின் பாதுகாப்புக்காக நமது பங்களிப்பை அளிக்கவேண்டும்.




சமூக இடைவெளியைக் கடைபிடிப்போம். மற்றவர்களிடமிருந்து இரண்டு மீட்டர்கள் தள்ளியிருப்போம்



உடல்ரீதியான இடைவெளி கடினமாக இருந்தால், முகக்காப்பு அணிவோம்



கைகளை நன்றாகவும் அடிக்கடியும் கழுவுங்கள்

மேலும் விபரங்களுக்கு **ontario.ca/coronavirus** தளத்துக்கு வருகை தருக

ஒன்டாரியோ அரசாங்கத்திற்காக ஒன்டாரியோ அரசாங்கத்தால் வழங்கப்பட்டது

Ontario

# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- ✦ தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ✦ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- ✦ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- ✦ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- ✦ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- ✦ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com





# 5ம் ஆண்டு நினைவஞ்சலி

## கிங்ஸ்லி மரியதாஸ் அந்தோனிமுத்து (நேசன்)



பூமித்தாயின் மடியில்:
3 ஆவணி 1957

ஆண்டவன் அடியில்:
16 ஆனி 2015

பூத்துக் குலுங்கிய முகத்தவரே! புன்சிரிப்புத் தவழ
அல்லும் பகலும் உழைத்திட்ட ஒளிவிளக்கே!
புலம் பெயர் அவலத்தைக் கலைக்கப்
பாசத்தால் புத்துணர்வு ஊட்டி
நீர் காணாப் பட்டத்தைப் புத்திரிகளுக்கு ஊக்கிப்
பட்டதாரிகள் ஆக்கி வெற்றி கொண்டாடினீர்!
வாடி வரும் மாந்தருக்கு அட்சயபாத்திரமானீர்!
சுற்றம் விழுப்பமுறக் குதூகலித்த குலமகன்!
யாரையும் புண்படவைக்காப் பண்பட்ட உள்ளம்
புன்சிரிப்பால் உலகாண்ட மனிதநேயன் நேசன்
மனத்திலே சூதுவாது கவ்வாது உத்தமனாய்
உலா வந்த சத்தியத்தின் தேவன்
நினைவழியா இதயங்களைச் சுமந்து
துயரம் தோய்ந்திட்ட கனதியுடன்
உங்கள் மூச்சின் சுவாசத்தில் வாழ்கின்றோம்!
உங்கள் நினைவால் துயருறும் அன்னம் (மனைவி),
வனஜா(மகள்), அனோஜா(மகள்), ஸ்ரெலா(மகள்),
அர்ஜுன் - டியா (பேரப்பிள்ளைகள்) உடன்பிறப்புக்கள்.

# இந்தியாவில் கரோனா சமூக பரவலாக மாறவில்லை; அச்சம் வேண்டாம் : ஐசிஎம்ஆர் திட்டவட்டம்




இந்தியாவில் கரோனா சமூக பரவலாக மாறவில்லை, யாரும் அச்சம் கொள்ள வேண்டாம் என இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் கூறியுள்ளது.கரோனா வைரஸைக் கட்டுப்படுத்த சமூக இடைவெளி அவசியம் என்பதால் பிரதமர் மோடியின் அறிவிப்புபடி, நாடுமுழுவதும் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்கள் தேவையின்றி வெளியே வர தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு செல்ல மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் கல்வி நிறுவனங்கள், வழிபாட்டு ஸ்தலங்கள் என அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

மதக்கூட்டங்கள், சமூக கூட்டங்கள் என அனைத்திற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்தும் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது. கராேனோவை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மே 3ம் தேதி வரையும் பின்னர் மே 17ம் தேதி வரையிலும் ஊடரங்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. 4ம் கட்டமாக மே 31ம் தேதி வரையிலும் நீட்டிக்கப்பட்டது.பின்னர் ஜூன மாதத்திலும் ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ள போதிலும் அந்தந்த பகுதிகளுக்கு ஏற்ப தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் கடந்த சில தினங்களாக டெல்லி, மும்பை, சென்னை உள்ளிட்ட நகரங்களில் கரோனா தொற்று பரவும் வேகம் அதிகரித்து வருகிறது. இதனால் கரோனா தொற்று சமூக பரவலாகி விட்டதா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆனால் மத்திய அரசு இதனை திட்டவட்டமாக மறுத்துள்ளது. இதுகுறித்து ஐசிஎம்ஆர் பொது இயக்குநர் பல்ராம் பார்கவா கூறியதாவது:

இந்தியா அதிகமான மக்கள் தொகை கொண்ட நாடு. இந்தியாவில் கரோனா சமூக பரவலாக மாறவில்லை. அதற்கான சூழல் இல்லை. மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம். மற்ற பல நாடுகளை ஒப்பிட்டால் இந்தியாவில் பரவும் வேகமும், பாதிப்பின் அளவும் மிக குறைவாகவே உள்ளது.15 மாவட்டங்களில் 0.73 சதவீத மக்கள் மட்டுமே கரோனா தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசு மேற்கொண்ட ஊரடங்கு நடவடிக்கை பலன் அளித்துள்ளதையே இது காட்டுகிறது. ஊரடங்கால் கரோனா வேகமாக பரவுவது பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சுகாதாரத்துறை வழிகாட்டுதலுடன் பாதுகாப்பான முறையில் ஜெ.அன்பழகன் உடல் அடக்கம்: தொண்டர்கள் கண்ணீர்



கரோனா பாதிப்பால் உயிரிழந்த திமுக மாவட்டச் செயலாளர் ஜெ.அன்பழகனின் உடல் சுகாதாரத்துறை வழிகாட்டுதலுடன் பாதுகாப்பான முறையில் அடக்கம் செய்யப்பட்டது. அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட நேரத்தில் தொண்டர்கள் கண்ணீர் சிந்தினர்.

திருவல்லிக்கேணி சட்டப்பேரவை உறுப்பினரும், சென்னை மேற்கு மாவட்ட திமுக செயலாளருமான ஜெ.அன்பழகன் இன்று காலை உயிரிழந்தார். அவரது மறைவு குறித்து தகவல் அறிந்த திமுக தலைவர் ஸ்டாலின், டி.ஆர்.பாலு ஆகியோர் நேரில் அஞ்சலி செலுத்தினர். பின்னர் கண்ணீருடன் ஸ்டாலின் வெளியேறினார். பின்னர் தகவலறிந்த கனிமொழி, உதயநிதி ஸ்டாலின், தயாநிதிமாறன் உள்ளிட்டோர் மருத்துவமனைக்குச் சென்றனர்.

ஜெ.அன்பழகன் உடல் சுகாதாரத்துறை வசம் ஒப்படைக்கப்பட்டது. மூடிய சவப்பெட்டியில் அவரது உடல் பாதுகாப்பாக ஆம்புலன்ஸில் ஏற்றப்பட்டு தி.நகர் கண்ணாம்மாபேட்டை இடுகாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. அவரது உடல் கொண்டு வரப்படுவதை ஒட்டி கண்ணாம்மாபேட்டை இடுகாடு அருகே தொண்டர்கள், பொதுமக்கள் குழுமியிருந்தனர்.ஆம்புலன்ஸில் பாதுகாப்பாக கொண்டுவரப்பட்ட ஜெ.அன்பழகனின் உடல் கண்ணாம்மாபேட்டை இடுகாட்டுக்குள் வந்ததும், இடுகாட்டுக்குள் 4 பேருக்கு மேல் இருக்கக்கூடாது என்கிற விதியையும் மீறி நூற்றுக்கணக்கானோர் குவிந்தனர்.

அவரது உடல் வைக்கப்பட்ட சவப்பெட்டி திறக்கப்படாமல், 10 அடி ஆழத்தில் தோண்டப்பட்ட குழியில் பாதுகாப்புக் கவச உடை அணிந்த சுகாதாரத்துறை ஊழியர்கள் உதவியுடன் இறக்கப்பட்டது. அவரது உடலுக்கு அவரது மகன் மற்றும் திமுகவினர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். அன்பழகனின் மனைவி, தம்பி, அவரது மனைவி உள்ளிட்டோரும் தனிமைப்படுத்தப்பட்டதால் இறுதிச் சடங்குக்கு வர இயலவில்லை.

அதேபோன்று திமுக தலைவர் ஸ்டாலின் உள்ளிட்டோர் சுகாதாரத்துறை வழிகாட்டுதல்படி பங்கேற்கவில்லை. ஜெ.அன்பழகனின் உடல் அவரது தந்தை ஜெயராமன், தாய் பூரணியம்மாள் உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டது.

ஜெ.அன்பழகன் உடல் அடக்கம் நடந்த அதே வேளையில், அறிவாலயத்தில் திமுக தலைவர் ஸ்டாலின், துரைமுருகன், கனிமொழி, உதயநிதி ஸ்டாலின், டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன், டி.கே. எஸ்.இளங்கோவன், மா.சுப்ரமணியம் உள்ளிட்ட தலைவர்கள் அவரது உருவப் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## மணப்பெண் உட்பட 32 பேருக்கு கரோனா பரிசோதனை : ஊரடங்கு விதிமுறையை மீறி நடந்த திருமணத்தில் பரபரப்பு


கரோனா பரவலைத் தடுக்கும் வகையில் ஊரடங்கு அமலில் உள்ள நிலையில் நாகர்கோவில் இருளப்பபுரத்தில் உள்ள மண்டபத்தில் நடந்த திருமணத்தில் விதிமுறையை மீறி 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.




இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத் திற்கு வந்த புகாரின் பேரில் நாகர்கோவில் கோட்டாட்சியர் மயில் தலைமையில் அதிகாரிகள் சென்று மண்டபத்திற்கு சீல் வைத்தனர். இந்த திருமணத்தில் ஊரடங்கை மதிக்காமல் பங்கேற்றதாக 202 பேர் மீது கோட்டாறு போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். மேலும் திருமணத்தில் சமூக இடைவெளியை பின்பற்றாததை தொடர்ந்து மணப்பெண், மற்றும் திருமணத்தில் பங்கேற்ற 31 பேருக்கு சளி, மற்றும் ரத்த மாதிரியை எடுத்து சுகாதாரத் துறையினர் கரோனா பரிசோதனை மேற்கொண்டனர்.

குமரி மாவட்டம் முழுவதும் ஊரடங்கு விதிமுறையை மதிக்காமல் திருமணம், மற்றும் ஆடம்பர விழாக்களை நடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் மு.வடநேரே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## எழுவர் விடுதலை; 30 ஆண்டு சிறைக்கொடுமை போதாதா? 1,007 நாட்கள் ஆகியும் ஆளுநர் காலதாமதம் செய்வது நியாயமல்ல: ராமதாஸ்



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள 7 தமிழர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும் என, பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.இது தொடர்பாக, ராமதாஸ் வெளியிட்ட அறிக்கை: "ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தவறுதலாக தண்டிக்கப்பட்ட பேரறிவாளன், அந்த வழக்கில் விசாரணை என்ற பெயரில் கைது செய்யப்பட்டு இன்றுடன் 29 ஆண்டுகள் நிறைவடைந்து 30வது ஆண்டு தொடங்குகிறது.

பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களை விடுதலை செய்ய உச்ச நீதிமன்றமே ஆணையிட்டும், அந்த விஷயத்தில் தமிழக ஆளுநர் முடிவெடுக்க மறுப்பது கண்டிக்கத்தக்கதாகும்.ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக பேரறிவாளனிடம் சிறிய விசாரணை நடத்த வேண்டி இருப்பதாக 29 ஆண்டுகளுக்கு முன் 1991ம் ஆண்டு ஜூன் மாதம் 11ம் தேதி இரவு சிபிஐயின் சிறப்பு புலனாய்வுப் பிரிவு பேரறிவாளனின் பெற்றோரிடம் கூறியது. விசாரணை முடிவடைந்ததும் அடுத்த நாள் காலையில் பேரறிவாளனை அனுப்பி வைப்பதாக விசாரணை அதிகாரிகள் உறுதியளித்தனர்.

அதை ஏற்று பேரறிவாளனை அவரது பெற்றோர் எந்த அச்சமும் இன்றி அனுப்பி வைத்தனர்.ஆனால், ராஜீவ் கொலை குறித்த சில விளக்கங்களைப் பெறுவதற்கான விசாரணை என்று அழைத்துச் சென்ற அதிகாரிகள், அங்கு பேரறிவாளன் அளித்த வாக்குமூலத்தை திரித்து எழுதி ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பொய்யாக சேர்த்தனர்.

பேரறிவாளன் அளித்த வாக்குமூலத்தை திரித்துப் பதிவு செய்ததன் மூலம் அவருக்கு தூக்குத் தண்டனை கிடைக்க தாம் காரணமாகி விட்டதாக வழக்கின் விசாரணை அதிகாரி தியாகராஜன் ஒப்புக்கொண்டதுடன், அதை உச்ச நீதிமன்றத்தில் மனுவாகவே தாக்கல் செய்திருக்கிறார். அதன் அடிப்படையிலேயே பேரறிவாளன் விடுதலை செய்யப்பட வேண்டும். மேலும், ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்ய பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டை உருவாக்கியது யார்? என்பதை இன்னும் புலனாய்வு அமைப்புகள் கண்டுபிடிக்கவில்லை.

இது தொடர்பாக உச்ச நீதிமன்றம் அடுக்கடுக்காக கேள்வி எழுப்பினாலும் கூட, அதற்கு புலனாய்வு அமைப்புகளால் பதில் கூற முடியவில்லை. வெடிகுண்டு தயாரித்தவர்களே யார் என்று தெரியாத நிலையில், அதற்கு பேட்டரி வாங்கித் தந்தார் என்று பேரறிவாளனை கைது செய்து 30 ஆண்டுகளாக சிறையில் அடைத்து வைத்திருப்பது எந்த வகையில் நியாயமாகும்? அதனடிப்படையில் பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களையும் விடுதலை செய்ய பரிந்துரை செய்து 09.09.2018 அன்று தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்தது. அவ்வாறு அனுப்பி இன்றுடன் 1,007 நாட்கள் ஆகியும் அதன்மீது முடிவெடுக்கவில்லை.

அமைச்சரவையின் பரிந்துரை மீது குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவெடுக்க வேண்டும் என்று ஆளுநருக்கு காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லை என்ற ஒற்றை காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு, இந்த விஷயத்தில் ஆளுநர் காலதாமதம் செய்வது நியாயமில்லை.இது தொடர்பாக எத்தகைய சட்ட ஆலோசனைகளை நடத்துவதாக இருந்தாலும் அதற்கு ஒரு மாதம் அவகாசம் போதுமானதாகும். அவ்வாறு இருக்கும் போது 1,007 நாட்களாகியும் இன்னும் முடிவெடுக்க முடியவில்லை என்றால், அதற்கு 7 தமிழர்களும் விடுதலையாகி விடக் கூடாது என்ற எண்ணம் தான் காரணமாக இருக்க வேண்டும். அவர்கள் அனைவருமே இந்த 30 ஆண்டுகளில் வாழ்நாளின் பெரும்பகுதியை இழந்துவிட்டனர்.

இனியாவது அவர்கள் தங்களின் வாழ்நாளை குடும்பத்தினருடன் கழிக்க வேண்டும்.அதை உணர்ந்து அவர்களின் விடுதலை குறித்து ஆளுநர் விரைந்து முடிவெடுக்க வேண்டும். இந்த விஷயத்தில் தமிழக ஆளுநருக்கு தமிழக அரசு உரிய முறையில் அழுத்தம் கொடுக்க வேண்டும்". இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சு ஈழம் என்ற சொல்லைக் கேட்டு மிரளுகிறது!

**நக்கீரன் -கனடா**

கடந்த மாதம் இலண்டனில் இருந்து வெளியாகும் The Guardian என்ற ஏட்டின் இணையதளப் பதிப்பில் வாசகர்களிடம் ஒரு பயண வினாடி வினா: உங்கள் தீவுகள் உங்களுக்குத் தெரியுமா? என்ற தலைப்பில் பல கேள்விகளைக் கேட்டிருந்தது.

எந்தப் பிரபலமான விடுமுறை தீவுக்கு ஈழம் என்ற ஒரு பூர்வீகப் பெயர் உள்ளது? (Eelam is an indigenous name for which popular holiday island?) என்பதுதான் கேள்வி.

வாசகர் ஒருவர் அந்தக் கேள்விக்கு சரியான பதிலை சிறிலங்கா எனத் தெரிவு செய்வார். ஆனால் ஒரு சிக்கல். எவரேனும் ஒருவர் சரியான பதிலாக சிறிலங்காவைக் குறிப்பிடும் பட்சத்தில், அதில் இந்தத் தீவின் அண்மைய இராணுவக் கிளர்ச்சியை நடத்திய அமைப்பின் முழுப் பெயர் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற மேலதிக விளக்கம் வெளியிடப்பட்டது. ('the full name of the island's recent military insurgency was LTTE – Liberation Tigers for Tamil Eelam' appeared.)

மிரண்டவன் கண்ணுக்கு அருண்டதெல்லாம் பேய் என்பார்கள். சிறிலங்கா வெளியுறவு அமைச்சு கேட்டுக் கொண்டதற்கு இணங்க இலண்டனில் உள்ள சிறிலங்கா தூதுவர் சரோசா சிறிசேனா அந்தப் பயண வினாடி கேள்வியை நீக்குகமாறு த கார்டியன் செய்தித்தாளுக்கு கடித மூலம் வேண்டுகோள் விடுத்தார். அதில் "ஈழம் என்ற சொல்லை சிறிலங்காவில் ஒரு தனி அரச சித்தாந்தத்தை பரப்புவதற்கு புலிகள் பயன்படுத்தினர், மேலும் ஈழம் என்ற சொல் ஒருபோதும் நாட்டிற்கான ஒரு பூர்வீக சொல்லாகப் பயன்படுத்தப்படவில்லை" எனச் சொல்லப்பட்டிருந்தது. (https://www.bbc.com/tamil/sri-lanka-52699833)

அதனை அடுத்து அந்தக் கேள்வி அகற்றப்பட்டது.

ஈழம் என்ற சொல்லைச் சிறிலங்காவில் ஒரு தனி அரச சித்தாந்தத்தைப் பரப்புவதற்கு வி. புலிகள் பயன்படுத்தினர் என்பது சரியே. ஆனால் ஈழம் என்ற சொல் ஒருபோதும் (சிறிலங்கா) நாட்டிற்கான ஒரு பூர்வீக சொல்லாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது பிழையாகும். வரலாறு வேறு விதமாக இருக்கிறது.

இலங்கைக் கிழக்காசியா மற்றும் கிழக்கு ஆபிரிக்காவுக்கிடையே சம தூரத்திலமைந்த ஒரு நாடு. கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியை இணைக்கும் கடற்பாதைகள் இலங்கை ஊடாகவே சென்றன. இந்திய துணைக் கண்டத்திற்கு அண்மையில் இலங்கை இருந்த காரணத்தால் அதன் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது. இலங்கையைப் பல நாட்டினர் பல பெயர்களால் அழைத்து வந்துள்ளனர். அவை லங்கா (சமற்கிருதம்), இலங்கை, ஈழம், மணி பல்லவம், இரத்தின துவீபம், நித்தில துவீபம், சேரன்றிப், சிலோன் முதலாயின ஆகும். இப் பெயர்கள் சில ஓரோர் காரணத்தைக் கருத்திற் கொண்டு, வேறு வேறு மொழி பேசும் வேற்று நாட்டார் தத்தம் மொழி இயல்புக்கமைய இட்டு வழங்கிய பெயர்களாகும்.

ஈழம் என்ற சொல்லுக்கு சரியான விளக்கம் இன்னும் யாரும் சொல்லவில்லை. ஈழம் என்னும் சொல்லுக்குக் கிழக்குநிலம் என்பது பொருள். தமிழக நிலப்பரப்பின் பெரும்பகுதி மேற்கில் உயர்ந்தும், கிழக்கில் தாழ்ந்தும் உள்ளது. இதனால் மேல்திசை, கீழ்திசை என்னும் சொல்வழக்கு தோன்றியது. தொல்காப்பியம் உவமைப் பொருள் உயர்ந்ததன் மேலும், தாழ்ந்ததன் மேலும் வரும் என்கிறது. அது தாழ்ந்த பொருளைக் 'கிழக்கிடும் பொருள்' என்று குறிப்பிடுகிறது. எனவே ஈழம், கீழம், கிழக்கு என்பவை ஒன்றோடொன்று தொடர்புடைய 'ஒருபொருட்பன்மொழி' என்பது தெளிவு.

ஈழம் என்ற சொல்லுக்கு அகராதிகள் (1) மாழைக்காட்டி (உலோகக்கட்டி), (2) பொன், (3) கள், (4) கள்ளி எனப் பொருள் தருகின்றன. இன்றைய கேரளத்தில் கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள சமூகம் ஈழவர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

ஈழம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் ஒன்றான பட்டினப்பாலையில் இடம்பெற்றுள்ளது.

பட்டினப்பாலை என்பது சங்ககாலத்து இலக்கியங்களில் ஒன்றான பத்துப்பாட்டில் அடங்கிய ஒரு நூல். பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். பண்டைய சோழ நாட்டின் சிறப்பு, சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு, அதன் செல்வவளம், கரிகாலனுடைய வீரச்செயல்கள், மக்கள் வாழ்க்கை முறை ஆகியவற்றை எடுத்து இயம்பும் இப் பாடல் 301 அடிகளால் அமைந்துள்ளது. கரிகால் சோழன் திரைக்கடலில் நாவாய்கள் பல செலுத்தி, சுங்க முறையை ஏற்படுத்தி, வெளிநாடுகளுடன் வாணிபத் தொடர்பு ஏற்படுத்தி தமிழகத்திற்கு உலகப்புகழை ஏற்படுத்தியவன். அவன் ஆண்ட சோழப் பேரரசின் தலைநகரமாக காவிரிப்பூம்பட்டினத்தின் விளங்கியது. கரிகால் சோழனுடைய

காவிரிப்பூம் பட்டினத்தின் பெருஞ்சிறப்பைச் சொல்வதே பட்டினப்பாலை ஆகும். காவிரிப்பூம்பட்டினத்தின் வளம் பல நிறைந்த தெருக்களை புலவர் வர்ணிக்கிறார்.

*நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்,*
*காலின் வந்த கருங் கறி மூடையும்,*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,*
*தென் கடல் முத்தும், குண கடல் துகிரும்,*
*கங்கை வாரியும், காவிரிப் பயனும்,*
*ஈழத்து உணவும்,*
*காழகத்து ஆக்கமும்,*
*அரியவும், பெரியவும், நெரிய ஈண்டி,*
*வளம் தலைமயங்கிய நனந் தலை மறுகின்....*
(பட்டினப்பாலை)

ஈழம் என்பது இலங்கைத் தீவுக்கும், காழகம் என்பது மலாய் நாட்டின் ஒரு பகுதியான கடாரத்தை குறிக்கும் பண்டைய பெயர்களாகும். கடாரம் இன்று கெடா என அழைக்கப்படுகிறது.

பிற்காலச் சோழர் காலத்தில் இயற்றப்பட்ட முத்தொள்ளாயிரம் என்ற சிற்றிலக்கியத்திலும் ஈழம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிள்ளிவளவனின் வீரத்தைப் பாடும்போது,

"கச்சி ஒருகால் மிதியா ஒருகாலால்
தத்து நீர் தன்னுஞ்சை தான் மிதியா
பிற்றையும் ஈழம் ஒருகால் மிதியா வருமே
நம் கோழியர் கோ கிள்ளி களிறு"

என்கிறது. அதாவது கிள்ளிவளவனின் யானையானது காஞ்சிபுரத்தை ஆக்கிரமித்துப் பின்னர் வட இந்திய நகரமான உஜ்ஜயினியில் ஒரு காலையும் அங்கிருந்து திரும்பி ஈழத்தில் மறுகாலையும் வைத்து சோழனின் ஆதிக்கம் தமிழ் நாட்டில் மட்டுமன்றி வட இந்தியாவிலும் கடல்கடந்து ஈழ நாட்டிலும் பரவி இருந்ததென்று பாடப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் ஈழத்துப் பூதன்தேவனார் என்ற புலவர் வாழ்ந்த புலவர் ஆவர். இவர் பாடிய ஏழு பாடல்கள் சங்க நூல்களில் இடம்பெற்றுள்ளன. இவர் அக்காலத்தில் தமிழர் வாழ்ந்து வந்த பகுதியாக விளங்கிய ஈழநாட்டில் வாழ்ந்தவராக இருக்க வேண்டும்.

எனவே ஈழம் என்ற சொல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே வழக்கத்தில் இருந்து வருகிற சொல்லாகும்.

ஈழம் என்ற சொல்லை தனது அரசியலுக்குப் பயன்படுத்திய முதல் அரசியல்வாதி சி.சுந்தரலிங்கம் ஆவார். 1959 ஆம் ஆண்டில் ஈழத் தமிழ்ர் ஒற்றுமை முன்னணி என்ற அரசியல் கட்சியைத் தொடங்கினார். இக்கட்சிச் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாததால் 1960 மார்ச்சு தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டார்.

எனவே ஈழம் என்ற சொல்லுக்கு நீண்ட வரலாறு உண்டு. ஈழம் என்ற சொல் ஒருபோதும் (சிறிலங்கா) நாட்டிற்கான ஒரு பூர்வீக சொல்லாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது பிழையான வாதமாகும்.

உண்மை என்னவென்றால் சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சு ஈழம் என்ற சொல்லைக் கேட்டு மிரளுகிறது என்பதாகும்.


கேரளா மூலிகை மருத்துவம்

வைத்திரயர் - சஞ்சீவ ராஜு

பரம்பரை மூலிகை வைத்தியசாலை
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜு இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறியாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கைகால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும்.
எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்!
நலமுடன் வாழுங்கள்!

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

647-294-3189

# ஈழத்துத் திருக்கோவில்கள் 900



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com



## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில்
### - மட்டக்களப்பு -

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரானா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளி
2. கைகளை அடிக்கடி கழுவுதல்
3. தேவையற்று வெளியே செல்லுதல்
4. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருப்பது

இந்த நான்கு நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரானா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த நான்கு நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

**மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்**

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்"
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.

செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோவில்பற்றிய பல சுவையான குறிப்புக்களை மட்டக்களப்பு மான்மியத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். மட்டக்களப்பு மான்மியம் என்பது பழமையான வரலாற்றுக்குறிப்புக்களைத் தன்னகத்தேகொண்ட ஏட்டுச்சுவடியாகும். செட்டிபாளையத்தைச் சேர்ந்த புலவர் இ.வ. கணபதிப்பிள்ளை அவர்கள் தம்மிடமிருந்த ஏட்டுச்சுவடியை, மகாவித்வான் எவ்.எக்ஸ்.சி. நடராஜா அவர்களிடம் கொடுத்துள்ளார். இப்பெரியவர் மட்டக்களப்பு மான்மியம் என்ற ஏட்டுச்சுவடியை நூலாகப் பதிப்பித்து உதவியுள்ளார். இந்த நூலிலே செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோவில் பற்றிய பல தகவல்கள் காணப்படுகின்றன.

கி.பி 1505 ஆம் ஆண்டு அந்நியர்கள் இலங்கையுள் காலடி எடுத்து வைத்தபொழுது, இலங்கைத்தீவு, அரசர்களால் ஆளப்பட்ட நாடாகவே காணப்பட்டது. மதப்பிரசாரம், வியாபாரம் போன்ற நோக்கங்களைக் கருத்திற்கொண்டு கீழைத்தேசங்கள்மீது நோட்டம் விட்ட மேலைநாட்டினர், இயற்கைவளம் நிறைந்த நாடுகளைத் தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவது அவசியமென உணர்ந்தனர். போத்துக்கீசர் யாழ்ப்பாணப்பிரதேசத்தை ஆட்சி செய்தபோது, சைவ ஆலயங்களை அழித்து, மக்களைக் கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்தனர். சைவசமயத்தின்மீது பக்தியும் பற்றும் கொண்டோர் ஊரைவிட்டோடினர். யாழ்ப்பாணத்திலே ஒத்துக்குடாவில் கந்தப்பர் என்பவர் செல்வாக்குடையவராகவும், சைவசமயத்தின்மீது ஆழ்ந்த பக்திகொண்டவராகவும் விளங்கினார். இவருக்கு மயிலியர், செம்பியர் என்ற இரு சகோதரிகளும், சுங்குமுத்து என்ற மகளும் இருந்தனர்.

இவ்வேளையில் இலங்கையின் பல பாகங்களிலும் தமது மதத்தையும் அதிகாரத்தையும் பரப்ப விரும்பிய போத்துக்கேயர், மட்டக்களப்பிலும் கால்கொண்டனர். இத்தருணத்தில் கண்டியை ஆண்ட விமலதருமன் என்னும் அரசன் இவர்களை அடக்கி, மட்டக்களப்பை கண்டி நகரத்தின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்துள்ளான். இவ்வாறு கண்டி அரசன் போத்துக்கேயருக்கு எதிராக இருப்பதை அறிந்த யாழ்ப்பாணத்து சைவசமயிகள் சிலர், ஒத்துக்குடா கந்தப்பரிடம் சென்று, யாழ்பாணத்தில் போத்துக்கேயரின் கெடுபிடிகளைத் தெரிவித்து, அங்குள்ள கண்ணகி அம்மன் விக்கிரகங்களை மட்டக்களப்பிற்குக் கொண்ட செல்ல உதவும்படி வேண்டுகோள் விடுத்தனர். அவர்கள் வேண்டுகோளை ஏற்ற ஒத்துக்குடா கந்தப்பர், தனது குடும்பத்தினருடன் ஏழு கண்ணகி அம்மன் விக்கிரகங்களையும், மூன்று வைரவர் விக்கிரகங்களையும், பணிசெய்வோரையும் படகிலேற்றி, மட்டக்களப்பு மண்முனைக்கு அருகில் இறங்கி, மண்முனைக்கு அடுத்து ஒரு கிராமம் அமைத்து சிறாம்பி (காவற்பரண்) கட்டி, விக்கிரகங்களைச் சிறாம்பியில் இருத்தி, பணிபுரிவோரை அருகில் இருத்தி மாளிகை அமைத்து வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு கிராமம் அமைத்துக் குடிபெயர்ந்த ஒத்துக்குடா கந்தப்பரை, போத்துக்கீயரின் உளவாளியெனத் தவறாகப்புரிந்து கொண்ட மட்டக்களப்புத் திக்கதிபன், கண்டியரசனுக்குத் தவறான தகவல்களைக் கொடுத்தான். திக்கதிபனின் பேச்சை உண்மையெனத் தவறாக எண்ணிய கண்டி அரசனின் கட்டளைப்படி, ஒத்துக்குடா கந்தப்பரின் குடும்பம், மட்டக்களப்பு வாவியிலே அழிழ்த்திக் கொல்லப்பட்டது. இவரது மறைவின் பின் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவந்த ஏழு கண்ணகி விக்கிரகங்களில் ஒன்றை இருந்த இடத்திலேயே வைத்தனர். ஏனைய ஆறு கண்ணகி விக்கிரகங்களையும் ஆறு பிரதான ஊர்களில் வைத்தனர். கொலை செய்யப்பட்ட ஒத்துக்குடா கந்தப்பரின் பிரேதம் ஒதுங்கிய இடம் ஒத்துக்குடா எனச் செட்டிபாளையத்திலும், சிறாம்பிகட்டி கண்ணகி சிலைகளை வைத்திருந்த இடம் கிரான்குளத்தில் சிறாம்பியடி எனவும், அழைக்கப்பட்டது.

*வளரும்...*

SHANGARA DEVI ASTROLOGY & PSYCHIC CENTER
Master. GURU SWAMY


Most Powerful Spiritualist from India
We can Handle any Problem Are you depressed & Lonely?
உங்கள் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி
உங்கள் கை, முகம், நகம்,குறிப்புப் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.
All Religions welcome. 100% Guaranteed Result
Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits
Bad Luck &Jadoo & Give 100%,Life Long Protection
Open 7 days
10am -8pm

Name & Date of Birth - Horoscope
Hand Reading
Past, Present & Future
Overseas & Travel
Marriage, Family Matters
Husband -Wife Problems - Divorce
Children Education
Children Mistakes

Property, Court Problems
Face Reading
Love & Money Problems
Education & Work
sexual Problem
Jealousy & Black Magic
Health & Business
Evil affection

செய்வினை கோளாறா,
பேய் பிசாசு தொந்தரவா,
எதிரிகள் தொந்தரவா,
கண் திருஷ்டி, நாகதோசம்,
காதல் விவகாரங்கள்,
தொழில், மனை அபிவிருத்தி,
வாகனப் பொருத்தம்,
காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கு
தீர்வு காண அழையுங்கள்.

www.shankaraguruji.com
647-763-5262
1415 Kennedy Road Unit #7, Scarborough, M1P 2L6
New Quality Bakery (upstair) Near Royal Bank (Kennedy& Ellesmear)

# அன்பின் தொனி - 564

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை**

**நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம்.**

மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. ஆகையால் நீ தர்மஞ்செய்யும் போது, மனு'ரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே, அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறி யாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம், மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலய ங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள், அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவே சித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு, அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானி களைப் போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படு மென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள், உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். நீங்கள் ஜெபம்பண்ண வேண் டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித் துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.

**மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியுங்கள்.**

மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள், அவர்கள் உபவா சிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள், அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர் களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப் பார். பூமியிலே உங்களுக்குப் பொக்கி'ங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம், இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும், இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கி'ங்களைச் சேர்த்துவையுங்கள் அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக் கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது, உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும், இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்.**

இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது, ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான், தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது. ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக் காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக் கிறதுமில்லை, அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார், அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள், அவைகள் உழைக் கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை, என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப் பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள், இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதி யையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள், நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும். **- மத்தேயு 6: 1-34**

**பிரியமான சகோதர, சகோதரிகளே!**
**இந்த நாட்களில் வீடுகளில் அடைக்கப்பட்ட நிலையில் இருந்தாலும், இடைவிடாமல் ஜெபிப்போம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதாமே உங்களைப் பாதுகாப்பாராக.**



# மரண அறிவித்தல்



தோற்றம்
06-08-1939

மறைவு
08-06-2020

# சற்குணதேவி பஞ்சலிங்கம்

கோண்டாவில் கிழக்கு பலாலி வீதியை பிறப்பிடமாகவும்,உரும்பிராய் கிழக்கு, Scarborough கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணதேவி பஞ்சலிங்கம் அவர்கள் 08-06-2020 திங்கட்கிழமையன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயம், அன்னம் அவர்களின் மகளும், காலஞ்சென்ற முருகேசு, செல்லம்மா அவர்களின் மருமகளும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், மனோறஞ்சிதன் (புத்தா), கமலாதேவி, சாந்தலிங்கம் (சாந்தா -தலைவர் கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம், Santha Electricals and Plumbing), தர்மலிங்கம் (றஞ்சன்), பத்மலிங்கம் (மோகன் பஞ்சலிங்கம் வீடு விற்பனை முகவர் Remex Community), சகுந்தலா தேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சந்திரா தேவி, கணேசலிங்கம், காலம் சென்ற பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற நல்லநாதன், தனபாலசிங்கம், லீலாவதி, கமலா தேவி.லோகநாதன் ஆகியோரின் சகோதரமும், புஸ்பஜோதி, காலஞ்சென்ற ஜெகநாதன், பவளமலர், யானகி, பாலசந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மிதுலன், கேதுலன், நந்தகோபன், சுரேகா, சோபிகா, லக்சிகா, தர்சிகா, தரணியா, நிதுசன், கிரிசன், றிகான், அருட்சன், றிசான், கார்த்திகா, ஜெனன், மயூரன், ஆதவன், துக்கா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1 இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home & Cremation Centre இல் சனிக்கிழமை 13.06.2020, 07:00 பி.ப 10:00 பி.ப வரையும் ஞாயிற்றுக்கிழமை 14.06.2020, 10:30 மு.ப — 11:30 மு.ப வரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு, 11:30 மணிமுதல் கிரியைகள் இடம்பெற்று பின்னர் 12492 Woodbine Ave, Gormley, ON, L0H 1G0 இல் அமைந்துள்ள Highland Hills ற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 01:00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

COVID-19 காரணமாக தயவு செய்து அசாதாரண நிலையை கருத்தில்கொண்டு இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவர்கள் முன்கூட்டியே உங்கள் பெயர்களை அறியத்தருமாறு வேண்டப்படுகின்றிர்கள் .

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
Mano (மகன்) 905 201-6855
Kamaladevy (மகள்) 416-605-3383
Santha (மகன்) 416-200-5470
Ranjan (மகன்) 416-873-3187
Mohan (மகன்) 647-321-7575
Devy (மகள்) 416-887-4768

www.uthayannews.ca

MEGA Financial Group
Ruban Lingam
Insurance Agent
Call:647-928-5626
PH28 - 4168 Finch Ave, East
Scarborough, ON M1S 5H6
Web: www.rubanlingam.com
Email: rubanlingam@hotmail.com

Employment Law
Severance Packages
Landlord and Tenant Law
Wrongful Dismissal
Human Rights
Employment Standards
Aravinth Jegatheesan
Barrister and Solicitor
437.229.9643
ARAVINTH LAW 920 Yonge St, Suite 510 Toronto, ON, M4W 3C7

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

25 Years in Publishing
UTHAYAN
உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1262 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 12, 2020

# ஒன்றாரியோ அரசால் பொறுப்பேற்கப்பட்ட முதியோர் வதிவிடத்தில் ஒரு மரணம் சம்பவித்ததால் மீண்டும் குழப்ப நிலை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் தனியார் நிறுவனங்களினால் நிர்வகிக்கப்பட்டு வந்த சில முதியோர் வதிவிடங்களில் பல்வேறு சீர்குலைவுகளினால் பல மரணங்கள் சம்பவித்த நிலையில் அவற்றில் சிலவற்றை ஒன்றாரியோ மாகாண அரசு பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக முன்னர் அறிவித்த முதல்வர் டக் போர்ட் அவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அதிகாரங்களை வழங்கியதன் மூலம் மேற்படி சில வதிவிடங்கள் பொறுப்பேற்கப்பட்டன.

பொதுவாகவே உணவு வழங்கும் முறைகள், வதிவிடத்தில் உள்ள அறைகள் சமையல் செய்யும் இடம் மற்றும் பொதுவாக சந்திக்கும் மண்டபங்கள் ஆகியவற்றில் போதிய கவனம் செலுத்தப்படாத நிலையிலேயே முன்னர் மரணங்கள் சம்பவித்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் , தற்போது மாகாண அரசால் பொறுப்பேற்கப்பட்ட ஒரு வதிவிடத்தில் இவ்வாறாக மரணம் சம்பவித்தமை அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

ஒன்றாரியோவில் உள்ள வுட்பிரிட்ஜ் என்னும் நகரத்தில் அமைந்துள்ள மேற்படி முதியோர் வதிவிடத்திலேயே இந்த மரணம் சம்பவித்துள்ளதாகவும் மரணமடைந்த அந்த வயதாகவருக்கு முறையான உணவு வழங்கப்படாமையே இதற்குக் காரணம் என அங்கு சென்று விசாரணைகளை நடத்திய சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தனர்.



ஒன்றாரியோ மாகணத்தின் முதியோர் நலன் பேணும் அமைச்சானது, இது தொடர்பாக நடத்திய விசாரணைகளில் Woodbridge Vista Care Community என்னும் பெயர் கொண்ட மேற்படி முதியோர் வதிவிடத்தில் கனடிய இராணுவத்தின் மருத்துவப் பிரிவினர் முக்கிய பணிகளில் ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரியவந்துள்ளது. மேலும் இந்த மரணம் கோவிட்-19 காரணமாக எற்பட வில்லை என்றும் சரியாக ஊட்டச் சத்துள்ள உணவு வழங்கப்படாமையே காரணம் என்றும் அமைச்சின் பரிசோதகர்கள் கண்டறிந்துள்ளனர்.

# வாஷிங்டனில் இந்திய தூதரக வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலை சேதப்படுத்தப்பட்டது



மினியாபிலிஸ் நகரில் காவல் துறையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த கருப்பினத்தவர் ஜார்ஜ் பிளாய்டு மரணத்திற்கு நீதி கேட்டு அமெரிக்கா முழுவதும் போராட்டம் நடைபெற்று வருகிறது.

அதிபர் ட்ரம்ப்பும் மெலானியா ட்ரம்பும் இந்தியா சென்றிருந்த போது மகாத்மா காந்தியின் சபர்மதி ஆச்சிரமத்தில் நேரம் செலவிட்டனர்.

நமஸ்தே ட்ரம்ப் நிகழ்ச்சியில் அவர் கூறும்போது காந்தியின் ஆஸ்ரமத்தை நானும் மெலானியாவும் பார்த்து மகிழ்ச்சியடைந்தோம். இங்குதான் புகழ்பெற்ற உப்புச் சத்தியாகிரகத்தை அவர் தொடங்கினார் என்று பேசினார்.

இந்நிலையில் காந்தி சிலை சேதம் குறித்து ட்ரம்ப் சுருக்கமாக அவமானம் என்று வெள்ளை மாளிகையில் தெரிவித்தார்.

டொனால்ட் ட்ரம்புக்காக அவரது ஆலோசகர் கிம்பர்லி கில்ஃபாயில் பெருத்த ஏமாற்றம் என்று காந்தி சிலை சேதம் குறித்து குறிப்பிட்டார்.

வடக்கு கரோலினா செனட்டர் டாம் டில்லிஸ் காந்தி சிலை சேதம் செய்யப்பட்டது அவமானகரமானது. அமைதிப் போராட்டம் சத்தியாகிரகத்தின் போராளி காந்தி அகிம்சை எப்படி மாற்றங்களைக் கொண்டு வரும் என்பதை நிரூபித்தார். ஆனால் இங்கு வன்முறை தலைவிரித்தாடுகிறது. இது நம்மை ஒன்றிணைக்காது என்று தெரிவித்தார்.

# இத்தாலியில் புதிதாக வதிவிட அனுமதி பெற்ற ஆறு இலட்சம் பேரில் 15 ஆயிரம் இலங்கையர்கள்



இத்தாலியில் வாழும் சட்டவிரோத குடியேறிகள் 6 லட்சத்திற்கும் அதிகமானவர்களுக்கு வதிவிட அனுமதி வழங்கப்படவுள்ளது. இந்த நடவடிக்கையின் கீழ் அந்த நாட்டில் வதிவிட அனுமதியின்றி வசிக்கும் இலங்கையர்கள் 15 ஆயிரம் பேருக்கு வதிவிட அனுமதி கிடைக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இத்தாலி உள்விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. ஜூன் மாதம் முதலாம் திகதி அமுல்படுத்தப்படும் பொது மன்னிப்பு காலத்தில் புதிய சட்டம் மூலம் இந்த வதிவிட அனுமதி வழங்கப்படவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. 8 வருடங்களின் பின்னர் செயற்படுத்தப்படும் இந்த பொது மன்னிப்பு கால சட்டம் மூலம் விவசாயம் மீன்பிடி வீட்டு பணி சேவை மற்றும் மேலும் சில பிரிவுகளின் ஊழியர்களுக்கு சேவை யோசனை ஊடாக தொழில் ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலம் இந்த வதிவிட அனுமதி கிடைக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஜூலை மாதம் 15ஆம் திகதி வரையிலான 45 நாட்களுக்குள் இந்த வதிவிட அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும் என இத்தாலி உள்விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LIFe Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074